பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை 30.10.2020 கதிர் 355

### இது ரகசியம் அல்ல!

அமெரிக்க வெளியுறவுச் செயலரின் இலங்கை விஜயத்தை ஒட்டிப் பேசப்பட்ட விடயங்களில் முக்கியமானது அவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்காமல் பயணமானமையாகும்.

அதைக் பெரிய விடயமாகத் தூக்கிப் பிடித்த பக்கம்02 »

# யாழில் இதுவரை 4 பேருக்கே தொற்று; அடுத்த ஆஸ்பத்திரிக்கு அவசரம் ஏன்?

## கோப்பாய் நிலைமை தொடர்பில் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் மாத்திரமே தற்போது வரை கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ள நிலையில் யாழில் ஒன்றுக்கு மேற்பட்ட கொரோனா வைத்தியசாலைகள் தேவைதானா என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

காலைக்கதிர் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு அவர் கேள்வியெழுப்பியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோப்பாய் கல்வியற் கல்லூரி தற்போது கொரோனா வைத்தியசாலையாக மாற்றப்படவுள்ளது. பக்கம் 11 »

# அரச ஊழியரை வீட்டிலிருந்து பணியாற்ற மீண்டும் உத்தரவு!

## மேல் மாகாணத்திலும் பிரதான நகரங்களிலும்

கொழும்பு, ஒக்ரோபர் 30

**கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றும் முறையை மீண்டும் நடைமுறைப் படுத்துமாறு அரச நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

**ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.** பக்கம் 02 »

## சிசுவுக்கும் தொற்று

பேலியகொட கொரோனா கொத்தணியுடன் தொடர்புபட்டு 21 நாள்களேயான பச்சிளம் ஆண் குழந்தையும் தாயும் கொரோனா பக்கம் 02 »

## சஜித் அணியில் இருந்து மூவர் அரசு பக்கம் தாவல்?



ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் அரசுடன் இணைந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 02 »

## நெடுந்தீவு வெடியரசன் கோட்டையும் இனிமேல் பௌத்த சின்னமாகலாமாம்!

### தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சகிதம் உயர்மட்டக் குழு நேரில் விஜயம் செய்து வியூகம் அமைப்பு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.30

நெடுந்தீவுப் பகுதிக்கு நேற்று முன்தினம் சத்தம் சந்தடியின்றித் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர், புத்தசாசன அமைச்சின் பிரதிநிதி பக்கம் 02 »

## புதிய நாடாளுமன்றப் பேரவையின் உறுப்பினராக டக்ளஸ் நியமனம்

நாடாளுமன்றப் பேரவையின் உறுப்பினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு நேற்றுப் பிரதமர் அலுவலகத்தினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

புதிதாக நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் 5 உறுப்பினர் பக்கம் 02 »

## ஐ.தே.க. ஆட்சியில் இலங்கை மீது எந்த நாடுமே சந்தேகப்படவில்லை

### ராஜபக்ஷகளின் ஆட்சியில் சீன சார்பு என இலங்கை அடையாளப்படுத்தப்படும் நிலைமை என்கிறார் ரணில்

கொழும்பு,ஒக்.30

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலங்களில் அனைத்து நாடுகளையும் முறையாக அணுகினோம். எந்தவொரு நாடும் இலங்கை குறித்து சந்தேகக் கண்ணுடன் நோக்கும் நிலையை உருவாக்கவில்லை.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் பக்கம் 02 »

## கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த 2 வாரங்களாவது நாட்டை முடக்குங்கள்

### அரசிடம் ரணில் வேண்டுகோள்

குறைந்தது இரு வார காலமேனும் நாட்டை முழு அளவில் முடக்காது கொரோனா வைரஸ் பரவலை ஒருபோதும் கட்டுப்படுத்த இயலாது. தடுப்பு மருந்து கண்டுப்பிடிக்கப்படாத நிலையில் அரசு இதைவிட அவதானமாக இருந்திருக்க பக்கம் 02 »

## ராஜபக்ஷ அரசு கோழைத்தனமானது அல்ல; பொம்பியோவும் அழுத்தம் கொடுக்கவில்லை!

### இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான இந்த அரசு கோழைத்தனமானது அல்ல. அமெரிக்க இராஜாங்கச்செயலாளர் மைக் பொம்பியோ இந்தியா மீது பிரயோகித்த அழுத்தங்களைக் கூட இலங்கையின் மீது இந்த விஜயத்தின்போது பிரயோகிக்கவில்லை.

– இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக பக்கம் 02 »

## கொரோனாத் தொற்று தீவிரம் நேற்றும் 586 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்று 586 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்துநாட்டில்கொரோனாத் தொற்றுக் பக்கம் 02 »

## மஹிந்தவைப் பொம்பியோ புறக்கணிக்க 20ஆவது திருத்தச் சட்டம்தான் காரணமா?

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்காமல் சென்றமை பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்கள், அதற்கான காரணத்தையும் கைகால் வைத்து – நீட்டி முழக்கி – எழுதவும் தவறவில்லை.

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை அடுத்து நாட்டின் பிரதமரின் அதிகாரம் குறைந்து விட்டது. 'றப்பர் ஸ்டாம்ப்' பதவியில் இருக்கும் ஒருவரைச் சந்திப்பது தேவையற்றது என்று கருதி அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் தம்பாட்டில் அடுத்த கட்டப் பயணத்துக்குப் போய் விட்டார் என்றும் கூட செய்திகள் வெளியாகின.

உண்மையில் என்ன நடந்தது என்பதை நோண்டிப் பார்த்தேன். இந்தச் சந்திப்பைத் தவிர்த்தவரே பிரதமர்தான் – மஹிந்ததான் – என்ற தகவல் மெல்லக் கசிந்தது. சந்திப்பைத் தவிர்த்தவர் பொம்பியோ அல்லர்.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் பொம்பியோவுக்கு ஜனாதிபதி மாளிகையில் இரண்டு சந்திப்புகள் இருந்தன.

ஒன்று – ஜனாதிபதி கோட்டபாயவுடன் நேருக்கு நேர் சந்திப்பு. இந்தச் சந்திப்பில் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவரும் பங்கு பற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மற்றது – அமெரிக்க, இலங்கைப் பிரதிநிதிகளுக்கு இடையிலான இரு தரப்பு சந்திப்பு. (Bilateral Meeting) இந்தச் சந்திப்பில் அமெரிக்க வெளிவிவகாரச் செயலரின் குழுவினரும் இலங்கைத் தரப்பில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவ கார அமைச்சர் உள்ளிட்ட குழுவினரும் பங்கு பற்றுவர் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்பாடுகளின்படி இந்தக் குழுவினருடனான இந்தக் கூட்டத்தில்தான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் சந்தித்திருக்க வேண்டும். இதைத் தவிர இவர்கள் இருவருக்கும் இடையில் வேறு தனி சந்திப்புக்கான ஏற்பாடு ஏதும் இருக்கவேயில்லை.

அப்படி இருக்கையில், பிரதமர் மஹிந்தவைச் சந்திக்காமலேயே பொம்பியோ, புறப்பட்டார் என்று நாங்கள் எல்லோரும் வெளியிட்ட செய்தி அபத்தமின்றி வேறில்லை.

அந்த இரு தரப்பு பொது ஒன்று கூடலில் மூன்றாவது நபர் போல பங்கு பற்ற விரும்பாத காரணத்தாலோ என்னவோ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்தக் கூட்டத்துக்குச் சமுகம் தரவில்லை.

இதுதான் நடந்தது. ஆக, மஹிந்த – பொம்பியோ சந்திப்பு நடக்காதமைக்கு பொம்பியோ காரணமல்லர்.

பிரதமர் மஹிந்தவுடனான தனியான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யத் தவறிய இலங்கை அதிகார வர்க்கம்தான் அதற்குப் பதில் கூற வேண்டும்.

பொம்பியோ வருகை விடயத்தில் இன்னும் இரண்டொரு விடயங்கள் உள்ளன.

கொழும்பில் ஊடக சந்திப்பில் பொம்பியோவிடம் இரண்டு கேள்விகள் கேட்கவே அனுமதிக்கப்பட்டது. அதில் ஒரு கேள்வியை ரூபவாஹினி ஊடகவியலாளரும் மற்றொன்றை வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவரும் தொடுக்க அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், அதே பொம்பியோ இந்த நெருக்கடியான அரைநாள் நிகழ்ச்சி நிரலுக்குள், ஜனாதிபதி கோட்டாபயவுக்கு மிகவும் நெருக்கமான 'அத தெரண' தொலைக்காட்சிக்கு சுமார் 45 நிமிட விசேட – தனித்துவ – பேட்டி ஒன்றை வழங்கினார் – இலங்கையை அதிகம் நெருக்கடிக்குள் ஆழ்த்தாத விதத்தில் அந்தப் பேட்டி அமைவது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தப் பேட்டி நிகழ்வு ஒழுங்குபடுத்தப்படுவதற்கு இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்னர் 'அததெரண' நிறுவனத்தின் நிர்வாகியும் ஜனாதிபதி கோட்டாபயவிற்கு மிக நெருக்கமானவருமான துலிப் ஜயவீரவும் கொழும்புக்காக அமெரிக்கத் தூதுவர் ரெப்லிட்ஸ் அம்மையாரும் தமக்குள் தனியே மதிய விருந்து ஒன்றில் கலந்து கொண்டு உரையாடிய படங்கள் முகப்புத்தகங்களில் வெளியாகியிருந்தன.

*"கோட்டாவும் முன்னாள் அமெரிக்கப் பிரஜை. வந்தவர்களும் அமெரிக்கர்கள். அண்ணனை வெட்டி தம்பி ஓடுகின்றார். அதற்குள்ளும் இரகசியங்கள் பொதிந்து கிடக்கும். தேடிப்பாருங்கள்.!"* – என்றார் எனது கொழும்பு ஊடக நண்பர் ஒருவர்.

தேடிப்பார்ப்போம். கிடைத்தால் வாசகர்களுடன் நிச்சயம் பகிர்வேன்.

–மின்னல் –

## ஐ.தே.க. ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

ஜப்பான் மற்றும் இந்தியா இலங்கையில் முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்களை சீனாவுக்கு வழங்கியமை குறித்து அமெரிக்கா அதிருப்தியும் சந்தேக நோக்குடனுமே உள்ளது. இதை அரசு உணர்ந்துள்ளது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ இலங்கை விஜயத்தின்போது சீனாவை விமர்சித்தமை போன்று மனித உரிமைகள் குறித்தும் நினைவூட்டினார்.

எனவே, எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் அது அந்த நாட்டின் தேசிய கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலங்களில் அனைத்து நாடுகளையும் முறையாக அணுகினோம். சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளுடன் எமது இராஜதந்திர தொடர்புகளும் அணுகுமுறைகளும் எந்தவொரு நாடும் இலங்கைக்கு குறித்து சந்தேகக் கண்ணுடன் நோக்கும் நிலையை உருவாக்கவில்லை. ஆனால், ராஜபக்ஷக்களின் ஆட்சியில் சீன சார்பு என்று இலங்கை அநாவசியமாக அடையாளப்பட்டது.

இதுவே இன்றைய நெருக்கடிகளுக்கும் காரணமாகியுள்ளது. எனவே, அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் விஜயத்தை அரசு எளிதாக எடுத்துக்கொள்ளாது இராஜதந்திர ரீதியில் சிறப்பாக அணுக வேண்டும். குறிப்பாக எம்.சி.சி. ஒப்பந்தம் போன்ற விடயங்களில் அமெரிக்காவின் நிலைப்பாடு யார் ஆட்சிக்கு வந்தாலும் அங்கு மாறுபடாது – என்றார்.

## கொரோனா வைரஸைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மலையகத்துக்குத் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்புக்குத் திரும்பிய நிலையில் நேற்று கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பி.சி.ஆர். பரிசோதனைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு வலியுறுத்தினேன். ஆனால், நோயாளிகள் இல்லை என முழு அளவில் பரிசோதனைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. குறிப்பிட்ட சில வைத்தியசாலைகளில் மாத்திரம் சந்தேகத்துக்கிடமான நோயாளிகளுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. ஆனால், தற்போது நிலைமை பாரியளவில் மோசமடைந்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு இன்னும் தடுப்பு மருந்து கண்டுப்பிடிக்கப்படாத நிலையில் சுகாதார அமைச்சு இதனை விட அவதானமாக இருந்திருக்க வேண்டும். இனி நாட்டை முழு அளவில் முடக்காது வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இயலாது. குறைந்தது இரு வார காலமேனும் நாட்டை முழு அளவில் முடக்க வேண்டும் – என்றார்.

## சிசுவுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தங்காலை, குடாவெல்ல பகுதியில் 25 வயதான பெண்ணுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து அவரது 21 நாள்களேயான பச்சிளம் ஆண் குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அக்குழந்தைக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இவ்வாறு தாய் – சேய் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனனர்.

## புதிய நாடாளுமன்றப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்ட நாடாளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபர், பிரதம நீதியரசர் போன்ற உயர் பதவிகளை நியமிப்பதற்கு குறித்த நாடாளுமன்றப் பேரவை ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும்.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் பிரதமர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரினால் நியமிக்கப்படும் தலா ஒருவர் என இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக ஐவர் இந்த நாடாளுமன்றப் பேரவையில் அங்கம் வகிப்பார்கள்.

அதனடிப்படையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்பு பேரவைக்கு பதிலாக தற்போது நாடாளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெடுந்தீவு வெடியரசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் மற்றும் பௌத்த துறவிகள் அடங்கிய குழுவினர் அங்குள்ள வெடியரசன் கோட்டையை பௌத்த சின்னமாகக் காட்டும் கபட நோக்கில் இரகசிய நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என அப்பகுதி மக்கள் ஆத்திரத்துடன் விசனம் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டை என்பது தமிழ், பௌத்த அரசன் வாழ்ந்த இடம் என இவர்கள் அங்கு கருத்துரைத்தனராம்.

யாழ்ப்பாணம் விகாரதிபதியுடன் பயணித்து, அப்பகுதிகளை நேரில் பார்வையிட்டு, அப்பகுதியின் நில உரிமை மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் உரித்து ஆகியன தொடர்பாகவும. அவர்கள் ஆராய்ந்துள்ளனர்

இதன்போது அப்பகுதிகளை அவர்கள் படமாக்கியதுன் அப்பிரதேசத்தினையும் அதன் அண்டிய பகுதிகளையும் ட்ரோன் கமராவின் உதவி கொண்டும் நீண்ட நேரம் ஒளிப்பதிவு செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் காரணமாக வெடியரசன் கோட்டைப் பகுதியினை பௌத்த சின்னமாகக் காண்பித்து அதனை ஆக்கிரமிக்கவோ அல்லது அப் பகுதியிலும் ஓர் விகாரையை அமைத்து நெடுந்தீவினையும் சிங்கள மயமாக்கும் முயற்சியை முன்னெடுக்கவோ தீவிர நடவடிக்கை எடுக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 9ஆயிரத்து 791ஆக உயர்வடைந்துள்ளது.

5 ஆயிரத்து 630 தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 4 ஆயிரத்து 142 பேர் குணமடைந்துள்ளனர். 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 435 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் நேற்று வரை 4 இலட்சத்து 80ஆயிரத்து 838 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

## மஹிந்தவைப் பொம்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொம்பியோ தனது இலங்கைக்கான விஜயத்தில் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் என முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளார் என்று ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகி வந்தன.

இதற்கு முன் இலங்கை வந்திருந்த சீனத் தூதுக்குழு ஜனாதிபதி, பிரதமர் என உயர்மட்டத்தைச் சந்தித்தே சென்றது.

இருப்பினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் சந்திக்காமல் சென்றிருப்பது அரச மட்டத்திலும்கூட விமர்சனங்களை எழுப்பியுள்ளன.

இதேவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பிரதமரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட அதேவேளையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன.

இதன் காரணமாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ பிரதமரைச் சந்திக்காமல் சென்றிருக்கலாம் என்றும் அரசியல் மட்டத்தில் பேசப்படுகின்றது.

எவ்வாறாயினும் அரச தரப்பிலிருந்து இந்தச் சந்தேகங்களுக்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

## ராஜபக்ஷ அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசியல் ரீதியாக அநாதைகளாகியுள்ள சஜித் தரப்பும், ஜே.வி.பியும் பொம்பியோவின் விஜயத்தின்போது பெரிதும் பதற்றமடைந்த போதிலும் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

நாட்டின் ஆட்சியாளர் முதுகெலும்புடைய தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடியவர் என்றால், உலக வல்லரசு என்றாலும் அழுத்தங்களைப் பிரயோகிக்காது.

ரணில் விக்கிரமசிங்க போன்ற கோழைகள் ஆட்சியில் இருந்திருந்தால் பொம்பியோவின் விஜயத்தின்போது பதற்றமடைந்திருக்க வேண்டும். ஏனெனில் உலக வல்லாதிக்க நாடுகளின் தாளத்திற்கு இவ்வாறான கோழை ஆட்சியாளர்கள் ஆடக்கூடியவர்கள். எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இந்த அரசு அவ்வாறு கோழைத்தனமானது அல்ல.

இந்த அரசு நாட்டின் இறைமை, பௌதீக ஒருமைப்பாடு என்பன குறித்து மிகுந்த கரிசனையுடையது.

மைக் பொம்பியோ இந்தியா மீது பிரயோகித்த அழுத்தங்களைக்கூட இலங்கையின் மீது இந்த விஜயத்தின்போது பிரயோகிக்கவில்லை. இதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தைரியமிக்க ஆட்சியே காரணம் – என்றார்.

## அரச ஊழியரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய மேல் மாகாணத்தில் உள்ள அரச ஊழியர்களும் நாட்டின் ஏனைய பிரதான நகரங்களில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்களும் வீட்டிலிருந்து பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும்படி அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சஜித் அணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹேசா வித்தானகே, சமிந்த விஜேசிறி மற்றும் மயந்த திஸாநாயக்க ஆகியோரே அரசுடன் இணையவுள்ளனர் என்று அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் எம்.பி டயனா கமகே தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆயத்தங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க முன்னெடுத்து வருகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

# மூன்றாம் அலை மிகவும் ஆபத்து: சமூகப் பரவல் அதிகரித்தே தீரும்!

## தொற்றுநோய் தடுப்புப் பிரிவு எச்சரிக்கை



இலங்கையில் கொரோனாவின் மூன்றாம் அலையின் வீரியம் அதிகமாகும். எனவே, நாட்டு மக்கள் அவதானமாகச் செயற்படாவிடின் கொரோனாவின் சமூகப் பரவல் அதிகரிக்கும்.

– இவ்வாறு தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிகை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் சமூகப் பரவலாக மாற்றம் பெற்றுள்ளது எனத் தொடர்ச்சியாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் நாட்டின் நிலைமை குறித்து தெளிவுபடுத்துகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் அதிகளவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இது அனைத்துமே பரந்த கொத்தணியாக கண்டறியப்பட்டுள்ளன. நாட்டில் இதுவரை மினுவாங்கொடை கொத்தணியே பெரிய கொத்தணியாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன் அடுத்த உப கொத்தணியாக பேலியகொட கொத்தணி உருவானது. இங்கு இப்போது பரவல் அதிவேகத்தில் உள்ளது. எனினும், இரு கொத்தணிகளும் ஒரே தொடர்பைப் கொண்டவையாகும். இந்தநிலையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றோம்.

கொத்தணியாக கொரோனா வைரஸ் பரவல் அடையாளம் காணப்பட்டாலும் இது சமூகப் பரவலாகும் நிலைமை உள்ளது. அதற்கு மக்களின் செயற்பாடுகள் காரணமாகும். சமூகத்தில் மக்களின் செயற்பாடுகள் முழுமையாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றும் விதமாக அமைய வேண்டும். கூட்டம் கூடுவது, பொது நிகழ்வுகளை கூட்டுவது என அனைத்துமே தவிர்க்கப்பட வேண்டும்.

மக்கள் அவதானமாக இல்லாதுபோனால் கொரோனாவின் சமூகப் பரவல் அதிகரிக்கும். அதேபோல் மூன்றாம் அலையின் வீரியம் அதிகமாகும். இந்த வைரஸ் செயற்படும் விதம் மாறுபட்டதாகும். விரைந்து பரவும் தன்மை கொண்டுள்ளது.

எனவேதான் அதிகளவில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இன்று நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் உள்ளனர். இவர்கள் மூலமாக கொரோனா வைரஸ் சமூக பரவலாக மாறும் அச்சுறுத்தல் உள்ளது.

எனினும், நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் நிலையில் நாம் உள்ளோம். எனவே, மக்கள் பொது நிகழ்வுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவசியமான நிகழ்வுகள் என்றால் குறைந்த நபர்களுடன் நிகழ்வுகளை நடத்த முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் அதிக கூட்டமான, சன நெரிசலான இடங்கள் என்றால் கொரோனா வைரஸ் மீண்டும் பரவும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது – என்றார்.

# இந்து சமய விவகார ஆலோசகர்களாக இருவரை நியமித்தார் பிரதமர் மஹிந்த

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இந்து சமய விவகாரங்களுக்கு இரண்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன், கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன் ஆகியோரே அலரிமாளிகையில் பிரதமரிடம் தங்களது நியமனக் கடிதங்களை நேற்றுப் பெற்றுக் கொண்டனர்.*





# விமானப் படையின் தளபதியாக சுதர்ஷன!



இலங்கை விமானப்படையின் தலைமைத் தளபதி ஏர் வைஸ் மார்ல் சுதர்ஷன பத்திரன, விமானப்படையின் 18 ஆவது தளபதியாக நியமிக்கப்பட உள்ளார். அடுத்த மாதம் 2 ஆம் திகதி முதல் இந்த நியமனம் நடைமுறைக்கு வரும்.

தற்போதைய விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் சுமங்கல டயஸ் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஓய்வு பெற உள்ளார்.

ஓய்வின் பின்னர் அவர் கனடாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படுவார். ஓய்வு பெறவிருக்கும் விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் சுமங்கல டயஸுக்கு நேற்றுமுன்தினம் பிரியாவிடை நடைபெற்றது.

# கொரோனா தொற்று சிகிச்சை நிலையங்களில் இடநெருக்கடி!

## வடமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் சிகிச்சை நிலையங்களில் மிகுந்த நெருக்கடி நிலவுவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.



சமகால கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில் –

வடமாகாணத்தில் சிகிச்சை நிலையங்களில் மிகுந்த நெருக்கடியான நிலை காணப்படுகின்றது. ஏற்கனவே மருதங்கேணியில் 50 பேருக்கு சிகிச்சையளிக்க கூடிய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிருஷ்ணபுரம் பகுதியில் 200 பேருக்கான சிகிச்சை நிலையமும், மாங்குளம் பகுதியில் மற்றொரு சிகிச்சை நிலையமும் அமைக்கப்படுகின்றன.

அடுத்தவாரம் இந்த இரு நிலையங்களும் நிச்சயமாகத் திறக்கப்படும். மேலும் வடமாகாணத்தில் தேவையற்ற விழாக்கள், ஒன்றுகூடல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதை நாங்கள் அவதானிக்கிறோம்.

மக்கள் ஆபத்தை உணர்ந்து பொறுப்புணர்வுடன் நடக்கவேண்டியது அவசியம்.– என்றார்.

# கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குக!

## சிலோன் தௌஹீத் ஜமாஅத் அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம்

கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்கான உரிமையை மீட்டுத் தர வேண்டும் என சிலோன் தௌஹீத் ஜமாஅத் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சிலோன் தௌஹீத் ஜமாஅத் அமைப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் அவர்கள் தெரிவிக்கையில் –

உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று பரவல் காரணமாக பல நாடுகளும் ஸ்தம்பித்துப் போயுள்ள நிலைமையை நாம் அனைவரும் அவதானித்து வருகிறோம்.

நம் நாட்டில் கொரோனா பரவல் தற்போது தீவிரமடைந்துள்ளதுடன், மரண வீதமும் அதிகரித்து வருகின்றது. இந்தக் கடிதம் எழுதப்படும் வரை 19 பேர் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு எரிக்கும் நிலை நம் நாட்டில் உருவாகியுள்ளது. இதுவரை மரணித்தவர்கள் அனைவரும் எரிக்கப்பட்டுள்ளார்கள்.

உலக நாடுகள் பலவும் கொரோனா தொற்றில் உயிரிழப்போரை அடக்கம் செய்யவும் எரிக்கவும் அனுமதித்துள்ளன. அவரவர் மத அனுஷ்டானங்களின் அடிப்படையில் செய்து கொள்வதற்கான உரிமையை வழங்கியுள்ளன.

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகள் என அனைத்தும் கொரோனாவில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளன.

நம் அண்டை நாடான இந்தியாவில் கூட அடக்கம் செய்வதற்குப் பூரண அனுமதி வழங்கப்பட்டுள்ளமையை எம்மைவிடத் தெளிவாக நீங்கள் அறிவீர்கள்.

ஆனால், நம் நாட்டில் அடக்கம் செய்வதற்கு உரிமை மறுக்கப்பட்டு, கொரோனாவால் உயிரிழப்பவர்கள் எரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இந்த நடைமுறை இஸ்லாமியர்களாகிய எம்மை மனதளவில் மிக ஆழமாகப் பாதித்துள்ளது என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

இலங்கையில் தற்போது 20 ஆவது அரசியல் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாக தாங்கள் மாறியுள்ள நிலையில், இஸ்லாமிய சமூகத்தின் மத உரிமையையும் முஸ்லிம்களின் மனநிலையையும் முழுமையாகக் கவனத்தில் கொண்டு ஜனாதிபதிக்குள்ள தனித்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்கான உரிமையை மீட்டுத் தர வேண்டும் என உங்களை அன்பாய் கேட்டுக் கொள்கிறோம்.

தம் உறவுகள் கொரோனாவில் மரணிக்கின்ற நிலையில் அவர்களின் உடல்கள் எரிக்கப்படுவது என்பது எம் சமூகத்தை மனதளவில் ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியுள்ளது.

உங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த உரிமையை மீட்டுத் தரும் போது இந்த சமூகம் உங்களுக்கு நன்றியுள்ளதாக இருக்கும் என்பதையும் இந்த இடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். – என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வீரியமடையும் கொரோனா

கொரோனாப் பரவல் கட்டுப்படுத்தல் தொடர்பாகக் கிடைக்கும் செய்திகள் மகிழ்ச்சி – திருப்தி – தருவனவாக இல்லை.

கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் அரசின் இயலுமையைத் தாண்டி எல்லை மீறுவனவாகத் தெரிகின்றன.

தினசரி தொற்றாளர்களின் எண்ணிக்கை ஓரிரு நூறுகளில் இருக்கும் போது அவர்களைக் கவனத்தில் எடுத்து, சிகிச்சையளித்து, பராமரிப்பது ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்தது. ஆனால் அந்த நிலைமை இப்போது அதிகாரிகள் தரப்பின் வசதி, வலிமையை மீறி விட்டதாகக் களமுனைத் தகவல்கள் கூறுகின்றன.

தொற்றுப் பரவும் போது – அது வேகமடையும் போது – இப்படியான நெருக்கடி ஏற்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

அந்த எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் தயார்படுத்தல்களை நாம் செய்திருக்க வேண்டும். செய்யவில்லை.

இதற்கு, அரசாங்கத்தின் இயலுமை போதுமானதல்ல என்பது ஒரு புறமிருக்க, கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கான வைத்தியசாலைகளைத் தயார்ப்படுத்துவதில் பிரதேச மக்களின் போதிய ஒத்துழைப்புக் கிட்டவில்லை என்பதும் முக்கிய காரணம் ஆகும். ஒத்துழைப்பு கிட்டவில்லை என்பதற்கு அப்பால் பெரியளவில் எதிர்ப்புகள் பரவலாகக் கிளம்பின என்பதும் கவனிக்கத்தக்கது. வரக்கூடிய நெருக்கடியின் தீவிரத்தை உய்த்துணரத் தவறி, ஒவ்வொருவரும் சுயநலம் பற்றியே சிந்தித்தோமேயல்லாமல், பொதுவாகக் கொரோனா எனும் கொள்ளை நோய் வைரஸைக் கூண்டோடு ஒழிக்கும் கூட்டு முயற்சி குறித்து சிந்திக்கவேயில்லை.

இப்போது நிலைமை கட்டு மீறும் போது அரசை மட்டும் நாம் குற்றம் சொல்லி நிற்பதில் அர்த்தமில்லை.

கொரோனாப் பரவல் தொடர்பாகப் பின்பற்ற வேண்டியவை என்று அரசு காட்டிய விதிமுறைகளை கடைப்பிடிப்பதிலும் நாம் – நமது சமூகம் – நமது மக்கள் போதிய சிரத்தை காட்டுபவர்களாகவும் இல்லை.

தேவையற்ற பயணங்கள் வேண்டாம், அநாவசியமான ஒன்று கூடல்களைத் தவிருங்கள், கொண்டாட்டங்களைத் தள்ளிப் போடுங்கள், சமூக இடைவெளியைப் பேணுங்கள், அடிக்கடி கைகளைக் கழுவி, முகக் கவசம் அணிந்து, கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துங்கள் என்றெல்லாம் பல தரப்புகளினாலும் பிரசாரப்படுத்தப்படுகின்றது.

அதை நம்மில் எத்தனை பேர் முழு அளவில் – முழு முக்கியத்துவம் கொடுத்து – உள்வாங்கிச் செயற்படுகின்றோம்?

கொரோனா வைரஸ் நம் வாசல் கதவைத் தட்டும் வரை நாம் எச்சரிக்கையடைபவர்களாக இல்லை என்பதுதான் துரதிஷ்டவசமான உண்மை.

வீதிகளில் சனக் கூட்டம் தினசரி அள்ளுப்படுவதையும், கூட்ட நெரிசல்களையும் பார்க்கும் போது கொரோனா கொடூரனின் மோசமான பக்கம் குறித்து இந்தச் சமூகம் கவலையேபடவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

கொரோனா வைரஸ் வீரியம் கொண்டு வேகமாகப் பரவுகின்றது. தந்திரோபாயமாகவும் பரவுகின்றது.

ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று குணங்குறி காட்ட முன்னரேயே அவரிடமிருந்து ஏனையோருக்கு பெருத்த எடுப்பில் அது பரவிவருகின்றது. அந்தத் தாற்பரியம் – உண்மை நிலைமை – நமக்குப் புரிவதில்லை.

நமக்கு முன்னால் வரும் ஒவ்வொருவருமே ஒரு கொரோனாத் தொற்றாளராக இருக்க முடியும். இருக்கக் கூடும். அதே போன்று நாமும், நமக்குத் தெரியாமல் இன்னொரு கொரோனாத் தொற்றாளரிடமிருந்து தொற்றைப் பெற்றவர்களாகவும், அதைக் காவிப் பரப்புவர்களாகவும் கூட இருக்கலாம்.

இந்த யதார்த்த நிலைமையை – உண்மையை – நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டோமேயால் இப்படி கொரோனா பரவுவதற்கான கள நிலைமையை ஏற்படுத்தி, கூட்டங்களில் கூடி நின்று, பொதுப் போக்குவரத்துகளில் தாராளமாகப் பயணித்து, பொறுப்பற்றுச் செயற்படமாட்டோம்.

நிலைமை கட்டுமீறி வருகின்றது.

கொரோனாத் தொற்றாளர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களைக் கூட அவர்களது வீடுகளிலேயே வைத்திருந்து சிகிச்சையளிப்பதுதான் வாய்ப்பானது என்று அதிகார வர்க்கம் திட்டமிடும் நிலைமைக்கு விவகாரம் இறுக்கமாகிவிட்டது.

ஏற்கனவே, கொரோனாத் தொற்றாளர்களுடன் முதல் சுற்றில் தொடர்பு கொண்டிருப்போர் எனச் சந்தேகப்படுவோரைக் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடவடிக்கை இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதனை இப்போது கைவிட்டு அவர்களை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தி வைத்துக் கண்காணிப்பது என்று அரசு தீர்மானித்துள்ளது. இப்படித் தனிமைப்படுத்திக் கண்காணிக்க வேண்டியோரின் எண்ணிக்கை பல்லாயிரங்களாகப் பன்மடங்கில் பெருகி வருகையில் இதைத் தவிர, அதிகாரிகளுக்கு வேறு வழியில்லை என்பதுதான் இதன் பின்னணி.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான ஒவ்வொரு கவசங்களையும் அது உடைத்து முன்னேறுகின்றது. அதன் பரவல் வேகத்துக்கு இடமளித்து நாம் பொறுப்பின்றிச் செயற்படுவதுதான் அது – வைரஸ் – நிலையாக நம்முள் காலூன்றி வீரியமாகப் பரவக் காரணம்.

நம்மை நாமே திருத்தாத வரையில் அதன் வீச்சு மென்மேலும் வீரியமடைவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

## கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் அனுராதா மட்டக்களப்பு அரச அதிபரை சந்தித்தார்!

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) மாவட்ட செயல கத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக கே. கருணாகரன் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஆளுநருடனான உத்தியோகபூர்வ முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இதன்போது ஆளுநர் மக்கள் இடங்களுக்குச் சென்று மக்கள் சந்திப்பை மேற்கொள்கின்றமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் ஆளுநரின் மக்கள் சந்திப்புக் காரியலயமும் பார்வையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச ரீதியில் இலங்கை முன்னேற்றம் கொரோனாவில் 112 ஆவதாக முன்நகர்வு!

உலகை அச்சுறுத்தும் கொடிய கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 112 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகளவில் மக்களை அச்சுறுத்திவரும் நிலையில், இலங்கையிலும் அதன் பாதிப்பு தற்போதைய காலங்களில் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணி காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணியில் மாத்திரம் பதிவாகியுள்ள மொத்த வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஐயாயிரத்து 731 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒன்பதாயிரத்து 205 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இந்த வைரஸ் காரணமாக நாட்டில் 19 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறான நிலையில், கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த மாதமளவில் சுமாராக 30 ஆவது இடத்தில் இருந்த இலங்கை கடந்த சில தினங்களில் சடுதியாக முன்னேறி 112ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையில் கொரோனா பரவல் ஆரம்பமாகிய காலப்பகுதியில் கடந்த ஜுன் மாதமளவில் இலங்கை 100ஆவது இடத்தில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனா வைரஸைத் தடுக்கும் வேலைத்திட்டத்தை அரச திணைக்களங்கள் தடையின்றி முன்னெடுக்குக!

**உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் அறிக்கை**

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டத்தை ஏனைய அரச சேவைகளும் தடையின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை, மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ரத்னசிறியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் கொவிட் – 19 வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வேலைத்திட்டம் மற்றும் அதற்கமைவாக ஏனைய அரச சேவைகளையும் தடையின்றி நடத்தி செல்லும் தேவை ஏற்பட்டுள்ளது.

தற்போது உள்ள நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி அர்ப்பணிப்புடன் கடமைகளை ஆக கூடிய வகையில் நிறைவேற்றுவதில் அரச அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் வலியுறுத்துகின்றேன்.

கொவிட் – 19 வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் பிரதானிகளால் கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகளை உள்ளடக்கி ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2020 ஏப்ரல் 18 ஆம் திகதி மற்றும் 2020 மே மாதம் 14 ஆம் திகதிய சுற்றறிக்கைகளில் கவனம் செலுத்தி அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய ஊழியர்களை சேவைக்கு அழைத்தல் மற்றும் நிறுவனங்களை நடத்தி செல்வதுடன் அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டபடி அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் சுகாதார பாதுகாப்புக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக செயல்பட வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத வழிபாடுகளுக்கு 50 இற்கு குறைந்தவர்களுக்கே அனுமதி!

மத வழிபாடுகளுக்காக மக்களை ஒன்றிணைக்கும் போது 50 பேருக்கு குறைந்த நபர்களை ஒன்றிணைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக எதிர்வரும் போயா தினத்தில் அதிகளவான கவனம் செலுத்துமாறு இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வழமை போன்று மத வழிபாடுகளை முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வெள்ளவத்தை கொலிங்வூட் பிளேஸில் கொரோனாத் தொற்றாளர் அடையாளம்!

வெள்ளவத்தை – கொலிங்வூட் பிளேஸில் கொரோனா தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் உள்ள தொடர்மாடியொன்றில் வசித்து வந்த இந்தியப் பிரஜையொருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரைக் கந்தகாடு சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பியுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பேலியகொட மீன் சந்தையின் சோதனைச் சாவடியில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் களனி முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை கடுமையாகப் பின்பற்றுங்கள்!

## ஊவா மாகாண ஆளுநர் அறிவுரை



கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் வகையில் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நேற்று (வியாழக்கிழமை) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கொரோனா வைரஸ் மீண்டும் தலைதூக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சால் வெளியிட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்கள் அடங்கிய சுற்றறிக்கையைக் கடுமையாகப் பின்பற்றுமாறு ஆளுநரால் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன் கெப்படிபொல மற்றும் பண்டாரவெல பொருளாதார மையத்தில் முன்னெடுக்கப்படும் வியாபார நடவடிக்கைகள் சுகாதார முறைமைகளைப் பேணி, பாதுகாப்பான பிரதேசமாகத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக, அந்த மையத்துக்கு சமுகமளிக்கும் அனைத்து வியாபாரிகளின் வாகனங்களும் தொற்று நீக்கம் செய்யப்பட்டு, அவர்களுக்குரிய பிரதேசத்திற்குப் பொறுப்பான சுகாதார அதிகாரிகளால் பரிந்துரைக்கப்படுவது கட்டாயமாகும் என உத்தரவிடப்பட்டது. மேலும் இந்தச் சட்டதிட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுதர்ன டெனிபிடிய, பண்டாரவளை மேயர், ஊவா மாகாண பிரதான செயலாளர், ஆளுநரின் செயலாளர், பதுளை மற்றும் மொனராகலை மாவட்ட செயலாளர்கள், பிரதி பொலிஸ் மா அதிபர், சுகாதார சேவை அதிகாரிகள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 20 ஆயிரம் பி.சி.ஆர். முடிவுகளை வெளியிடுகின்றமையில் தாமதங்கள்

ராகமையில் அமைந்துள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட ஆய்வகத்துக்குச் சொந்தமான பி.சி.ஆர். இயந்திரம் செயலிழந்துள்ளமையால், சுமார் 20 ஆயிரம் பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு உள்ளிட்ட கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவது தொடர்பான முடிவை எடுப்பதில் தாமதம் மற்றும் சிக்கல்கள் நிலவுகின்றன என கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

செயலிழந்த பி.சி.ஆர். இயந்திரம் தொடர்பான தகவல்கள் நேற்றுமுன்தினம் சுகாதார அதிகாரிகள் மற்றும் கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மைய உறுப்பினர்களிடையே இடம்பெற்ற சந்திப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இராணுவத் தளபதி சவேந்ர சில்வா, செயலிழந்த பி.சி.ஆர். இயந்திரத்தை திருத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் இயந்திரத்தை திருத்துவதற்காக சீனாவிலிருந்து நிபுணர்கள் வரழைக்கப்படவுள்ளமையுடன், இது தொடர்பில் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

## களுத்துறை மாவட்டத்தில் சில இடங்கள் விடுவிப்பு!

களுத்துறை மாவட்டத்தில் மத்துகம – பதுகம புதிய கொலனி பிரதேசத்தைத் தவிர அங்கு தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்கள் அனைத்தும் விடுவிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதற்கமைய மத்துகம பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஓவிட்டிகல, நவஜன உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அண்மையில் மத்துகம பிரதேசத்திலுள்ள தனியார் வங்கி நிறுவனத்தின் சேவையாளர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன் காரணமாக மத்துகம பிரதேச செயலகத்தில் ஓவிட்டிகல, பதுகம, புதிய கொலனி ஆகிய இடங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டன.

மேலும் மத்துகம – கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த பஸ் ஒன்றின் சாரதிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவருடன் அனுராதபுரத்துக்கு யாத்திரை மேற்கொண்ட 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது.

களுத்துறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் தகவல்படி இதுவரையில் மத்துகம பிரதேசத்தில் மாத்திரம் 30 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகள் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகள்





மட்டக்களப்பு, ஒக்.30

மட்டக்களப்பில் கொரோனா தொற்று அதிகரிப்பு பற்றி பொலிஸார், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், பொது சுகாதார திணைக்களம் பொலிஸார் இணைந்து பொது போக்குவரத்து வாகனங்களில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு ஸ்ரிக்கர் ஒட்டும் நடவடிக்கை ஒன்றை நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் ஆரம்பித்து வைத்தனர்.

இந்த கொரோனா தொற்று விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.என்.எஸ்.மென்டிஸ், பொலிஸ் அத்தியட்சகர் எஸ். ஆர்.குமாரசிறி ஆகியோரின் ஆலோசனைக்கமைய மாவட்ட போக்குவரத்து பொலிஸார் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரி.பி.ஏ.சரத்சந்திர தலைமையிலான போக்குவரத்துப் பொலிஸ் மற்றும் தேசிய இளைஞர்சேவை மன்ற மட்டக்களப்பு பணிப்பாளர் ஆலிதீன் கமீர் ஆகியோர் இணைந்து இந்த விழிப்பூட்டும் நடவடிக்கையை பஸ் நிலையத்தில் ஆரம்பித்தனர்.

இதற்கமைய இலங்கை போக்குவரத்து பஸ்கள், தனியார் போக்குவரத்து பஸ்கள் என்பவற்றில் இந்த ஸ்ட்டிக்கர் ஒட்டும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

## ஆடைக் கைத்தொழில் மையம் அமைக்க அமைச்சரவை அனுமதி!

### ஏறாவூர் பிரதேசத்தில்

மட்டக்களப்பு, ஒக்.30

ஏறாவூரில் ஆடைக் கைத்தொழில் முதலீட்டு வலயம் அமைப்பதற்கு அமைச்சரவைத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஏறாவூர் புன்னைக்குடாப் பிரதேசத்தில் நிறுவப்படவுள்ள துணி உற்பத்தி தொடர்பான தொழில் முயற்சியாளர்களுக்கென விசேட கைத்தொழில் வலயம் அமைப்பதற்கே அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

கைத்தொழில் அமைச்சின் விசேட முன்னுரிமையாக முதலீட்டுச் சபை காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுடன் இணைந்து ஏறாவூர் பிரதேசத்தில் ஆடைக் கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய முன்மொழியப்பட்ட துணிக் கைத்தொழில் வலயம் துணி உற்பத்தியுடன் தொடர்புபட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு விசேடமான கைத்தொழில் வலயம் மூலோபாய அபிவிருத்தித் திட்டமாக அறிவிப்பதற்கும் அதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுக்கு உரித்தான 275 ஏக்கர்களை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்கப்படவும் உள்ளது.

மேலும் இந்தக் கருத்திட்டத்துக்குத் தேவையான நிதியொதுக்கீடு செய்யவும் இந்தக் கைத்தொழில் வலயத்தில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்க முதலீட்டு ஊக்குவிப்பு வழங்குவதற்கும் கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## பொகவந்தலாவையில் இரு பெண்களுக்குக் கொரோனா!

பொகவந்தலாவை பகுதியில் பெண்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை, கொட்டியாகலை மத்திய பிரிவு தோட்டத்திலேயே இவ்வாறு பெண்கள் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதாக பொகவந்தலாவ பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பகுதியிலுள்ள மீன் ஏற்றி செல்லும் லொறியின் சாரதியொருவர், அண்மையில் கொழும்பு பேலியாகொட மீன் சந்தைக்குச் சென்று வந்துள்ளார். இதனையடுத்து, குறித்த லொறியின் சாரதிக்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொரோனா தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து அவரது குடும்பத்தில் உள்ள பத்து பேருக்கும் பி. சி. ஆர். பரிசோதனை மேற்கொண்ட போது ஒரு குடும்பத்தை சேர்ந்த இரண்டு பெண்களுக்கு தொற்று உறுதியாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோனா தொற்று உறுதியான பெண்களில், ஒருவர் கடந்த 20 ஆம் திகதி பொகவந்தலாவ சிறி தண்டாயுதபாணி ஆலயத்துக்கு பூஜை ஒன்றில் கலந்து கொண்டமையால் இந்த ஆலயம் மூடப்பட்டு ஆலயத்தில் உள்ள ஆறு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி பூஜை வழிபாட்டில் கலந்து கொண்ட அனைத்து அடியார்களையும் பொகவந்தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு சமூகம் தந்து பரிசோதனைக்காகத் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# மருதனார்மடம் பொதுச்சந்தையின் வியாபாரிகள் கவனவீர்ப்பு போராட்டம்!







யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணம் – வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகள் நேற்றையதினம் தமது வியாபார நடவடிக்கையைப் புறக்கனித்து, சந்தைக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருதனார்மடம் பொதுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் சந்தைக் கட்டடத் தொகுதியில் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடு சம்பந்தமாகவே இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதேச சபையால் வழங்கப்பட இருக்கும் இடத்தின் அளவீடு தமது வியாபார நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு போதுமானதாக இல்லை என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'மக்கள் பிரதிநிதிகளான உங்களுக்கு எங்களை மக்களாகத் தெரியவில்லையா?', 'எமக்கு உரிய இடத்தை பழையதுபோல் நிறைவாகத் தாருங்கள்' 'உங்களுடைய முதலாளித்துவ அதிகாரத்தை ஏழைப் பாட்டாளிகள் மீது திணிக்காதே.', 'வேண்டும் வேண்டும் நியாயம் வேண்டும்' என வாசகங்கள் எழுதப்பட்ட பதாதை களை ஏந்தியிருந்தனர்.

அத்தோடு தமக்கு நியாயம் பெற்றுத்தர வேண்டுமென கோரி, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் புகைப்படம் அடங்கிய பதாதைகளையும் போராட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் கையில் ஏந்தியிருந்தனர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக கடந்த 22 ஆம் திகதி பிரதேச சபைக்கு முன்பாகவும் வியாபாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா மரணம் தொடர்பாக சரியான தகவல் தருவதில்லையா?

## பதில் தருகிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, ஒக்.30

சமூகத்தில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் கொரோனா மரணம் தொடர்பில் சரியான தகவல்கள் வெளியிடப்படுவதில்லை எனவும் பரவும் செய்திகள் தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா விளக்கமளித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இலங்கையில் உள்ள சிரேஷ்ட வைத்தியர்கள் குழுவே எம்முடன் உள்ளனர் என்றும் தனக்கு வைத்தியர்கள் கூறுவதைத்தான் தன்னால் கூற முடியும் என்று தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான அனைவருக்கும் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களால்தான் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கூறுகின்றமையால்தான் சமூகத்தில் கொரோனா தொற்று இல்லை எனக் கூறுகிறார் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# சட்டவிரோத மதில் கட்டும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு!





போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'நியாயமற்ற மாநகர சபையே எமது மக்களுக்கு நியாயம் தா? விலைபோகாதே' என பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குற்பட்ட, ஆறுகால் மடம், பழம் வீதியில், வீதிவாய்க்காலை மறித்து சட்டவிரோதமாக மதில் கட்டும் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையினருக்கு தெரியப்படுத்தியும், இன்றுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்காது அசட்டையீனமாக செயற்படுவதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் வடிந்து செல்லும் வாய்க்காலில் தனிநபர் ஒருபர், ஒரு பகுதியை கையகப்படுத்தி மதில் கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதால், தமது பகுதிகளில் வெள்ள நீர் வடிந்தோட முடியாமல் தேங்கி மாரி காலத்தில் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

# எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசு கையெழுத்திடாது!

சர்வதேசத்தின் மத்தியில் தலைகுனியும் அரசாங்கத்தை நாட்டு மக்கள் தோற்றுவிக்கவில்லை. அமெரிக்காவுடனான எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசாங்கம் ஒருபோதும் கைச்சாத்திடாது.

ஒருவேளை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிலை ஏற்பட்டால் அரசாங்கத்தில் இருக்கமாட்டோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கைத்தொழில் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் வருகை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்து அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தில் எம்.சி.சி. ஒப்பந்தத்தின் முதல் வரைவு கைச்சாத்திடப்பட்டது. அப்போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அவரது தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அமெரிக்க இராஜாங்கச் செயலரது வருகையை தொடர்ந்து அரசாங்கம் எம்.சி.சி. ஒப்பந்தத்தை கைச்சாத்திட முனைவதாக அரசியல் பிரசாரம் செய்கிறார்கள். எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பான தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என மைக் பொம்பியோ தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை நாட்டின் இறையாண்மை, சுயாதீனத் தன்மை இதனூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மைக் பொம்பியோ அல்ல அவரை விட அதிகாரம் கொண்டவர் எவரும் இலங்கையின் சுயாதீனத்தன்மைக்கு கட்டுப்பட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

நாட்டுக்கு எதிரான எம்.சி.சி. ஒப்பந்தத்தை ஏற்கப்போவதில்லை என்பது அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது. எந்நிலையிலும் எம்.சி.சி. ஒப்பந்தத்தை கைச்சாத்திட மாட்டோம். –என்றார்.

# தம்புத்தேகம பொருளாதார நிலையத்திலும் கொரோனா!

அனுராதபுரம், தம்புத்தேக பொருளாதார நிலையத்தில் 11 வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மீகொட பொருளாதார நிலையத்திலிருந்து தம்புத்தேக பொருளாதார நிலையத்துக்கு வருகை தந்த தொழிலதிபர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மீகொடையிலிருந்து வந்த கொரோனா நோயாளருடன் தொடர்புகளை பேணிய இருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன் விளைவாக தம்புத்தேகம பொருளாதார நிலையத்தில் சுமார் 100 நபர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனை முடிவுகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறித்த பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிழக்கில் கொரோனா தொற்றாளர் அதிகரிப்பு!

## மாகாண சுகாதார பணிப்பாளர் தகவல்

மட்டக்களப்பு, ஒக்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பட்டபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் மற்றும் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 3 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கொரோனா நிலைமை தொடர்பாக நேற்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் கொழும்புக்கு சென்று திரும்பினார் என பொதுச் சுகாதார அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய அந்த நபர் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு, அவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டமையையடுத்து மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன் அவருடன் தொடர்புபட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் -

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 56 ஆக அதிகரித்துள்ளது. எனவே பொதுமக்கள் தேவையில்லாமல் வீட்டை விட்டு வெளியேறாமல் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கவனமாகச் செயற்படுமாறும் - கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், சுகாதார நடைமுறைகளை அவசியம் கைக் கொள்ளுமாறும், களுவாஞ்சிகுடி பொலிஸாரும், சுகாதார பிரிவினரும், பிரதேச சபையினரும், ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

# கொரோனாவிலிருந்து 67 பேர் குணமடைவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 67 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 4 ஆயிரத்து 142 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ளனர்.

நாட்டில் இதுவரையில் 9 ஆயிரத்து 205 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 4 ஆயிரத்து 142 பேர் இதுவரை பூரணமாகக் குணமடைந்துள்ள நிலையில், 5 ஆயிரத்து 44 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் இந்த வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 19 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுராதபுரத்தில் 11 வர்த்தக நிலையங்கள் கொரோனாவால் தற்காலிகமாக பூட்டப்பட்டன!

அனுராதபுரம் - தம்புத்தேகம பொருளாதார நிலையத்தில் 11 வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மீகொட பொருளாதார நிலையத்திலிருந்து தம்புத்தேகம பொருளாதார நிலையத்துக்குச் சென்ற தொழிலதிபர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மீகொடையிலிருந்து சென்ற கொரோனா நோயாளருடன் தொடர்புகளைப்பேணிய இருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன் விளைவாக தம்புத்தேகம பொருளாதார நிலையத்தில் சுமார் 100 நபர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனை முடிவுகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் 30 தொற்றாளர்; சுற்றுலா செல்வதற்குத் தடை!

நுவரெலியா, ஒக்.30

நுவரெலியாவிற்கு சுற்றுலா மேற்கொள்ள வேண்டாம் என மாவட்ட செயலாளர் ரோஹன புஷ்பகுமார கோரிக்கை விடுத்துள்ளார்.

நுவரெலியாவில் 30 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையால், நுவரெலியாவுக்கு பயணங்களை மேற்கொள்வதற்கு சிறந்த நிலை தற்போது இல்லை என மாவட்ட செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, நுவரெலியாவில் உள்ள கிரகெரிகுளம், பூங்கா உள்ளிட்ட அனைத்து சுற்றுலாப் பகுதிகளும் தற்போது மூடப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் சமூகமாகும் வரை நுவரெலியா மாவட்டத்துக்கான சுற்றுப் பயணங்களைத் தவிர்க்குமாறும் மாவட்ட செயலாளர் ரோஹன புஷ்பகுமார கூறியுள்ளார்.

# ஊரடங்கை மீறுபவர்களை கைதுசெய்ய நடவடிக்கை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு




தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி செயற்படும் நபர்களைக் கைது செய்ய சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், நேற்று திறக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாதவர்கள் கைதுசெய்யப்பட்டு தனிமைப்டுத்தலுக்கு உட்படுத்தப் படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த விடயங்கள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அத்தியாவசியமற்ற பயணங்களுக்காக மேல் மாகாணத்துக்கு வருகை தருகின்றமையைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், நேற்று நள்ளிரவுக்குப் பின்னர், அத்தியாவசியமற்ற பயணங்களுக்காக மேல் மாகாணத்தில் உட்பிரவேசிக்கவோ அல்லது வெளியேறவோ அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இந்த வாரத்தின் இறுதி நாள்கள் மிகவும் தீர்மானம் மிக்கவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், ஊரடங்கு அமுல்படுத்தப்படாத பகுதிகளில் உள்ளவர்கள் அநாவசியமாக ஒன்று கூடுவதைத் தவிர்க்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# மனிதாபிமான உதவிகளினைப் பெற மட்டு.மாவட்ட செயலகம் நடவடிக்கை

மட்டக்களப்பு, ஒக். 30

மட்டக்களப்பில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையிட்டு தனிமைப் படுத்தப்பட்டவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்ந்தும் மாவட்ட செயலகத்தால் பெற்றுக்கொடுக்க மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்தின் ஒருங்கிணைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டுவரும் லிப்ட் தன்னார்வுத் தொண்டு நிறுவனத்தால் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 உலர் உணவுப் பொதிளைக் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

கொரோனா தொற்று காரணமாக கோரளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி மற்றும் மன்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் லிப்ட் அமைப்பின் பொதுச் செயலாளர் ஜானு முரளிதரனால் இந்த உலர் உணவுப் பொதிகள் மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரனிடம் கையளிக்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொதிகளைக் கையளிக்கும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், நிர்வாக உத்தியோகத்தர் கே. தயாபரன், மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தன் லிப்ட் அமைப்பின் பொருளாளர் தர்சினி சுபாஸ்கரன், வெளிக்கள இணைப்பாளர் எம். தயானிதி உட்படப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# துமிந்தவை விடுதலைக்குக் கோரும் கடிதம் வாபஸ் பெறுகின்றார் என மனோ அறிவிப்பு!

மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுதலை செய்யுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை கடிதத்திலிருந்து தமது கையெழுத்தை வாபஸ் பெறுகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரை சுட்டுக்கொலை செய்த குற்றத்துக்காக துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு 2016 செபரெம்பர் 8 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரச தரப்பு உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருந்த மனுவில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் அந்த கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் கையொப்பமிட்டனர்.

ஒக்ரோபர் 20 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட இந்த மனு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் செல்லும் போது, துமிந்த சில்வாவின் விடுதலையானது உறுதிப்படுத்தப்படும் என்றும் ஆங்கில ஊடகம் கடந்த வாரம் அறிக்கையிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்ட மனோ கணேசன், துமிந்த சில்வாவை போன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் அவர்களின் வாழ்க்கையில் பெரும்பாலான காலத்தை சிறையில் செலவிட்டுள்ளனர் எனக் கூறினார்.



ஆகவே அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு அவர்களின் குடும்பங்களுடன் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

எனவே மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவை பொது மன்னிப்பில் விடுவிக்கும் மனுவில்தான் கையொப்பமிட்டதாக மனோ கணேசன் அண்மையில் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றை அடுத்து கரவெட்டி இராஜகிராமம் முடக்கம்

## பல குடும்பங்கள் கட்டாயத் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 29

யாழ். வடமராட்சி, கரவெட்டி பிரதேசத்துக்குட்பட்ட இராஜகிராமத்தில் உள்ள பல குடும்பங்கள் சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்ட மூவரில் ஒருவர் இராஜகிராமத்தைச் சேர்ந்தவர் என்பதால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த முடக்கல் இன்று மாலை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என வும் அவர் கூறினார்.

இராஜகிராமத்துக்குள் வெளியாள்கள் நுழையவோ அல்லது குறித்த கிராமத் தைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேறவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## மாநகர சபையின் சபை கூட்டமைப்பு உறுப்பினர்கள் சுமந்திரன் எம்.பியுடன் விரிவான கலந்துரையாடல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் மற்றும் சபையின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இன்றைய தினம் சந்தித்து தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடினார்.

உள்ளூராட்சி சபைகளில் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் இடம்பெறவுள்ள நிலையில் அதனை வெற்றி கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பில் கலந்துரையாடி நிலைமைகள் தொடர்பில் முதல்வரிடம் அவர் கேட்டு அறிந்து கொண்டார். கூட்டமைப்பு உறுப்பினர்கள் 16 பேரும் கூட்டமைப்பாக - ஒன்றாக வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர் ஏனைய விடயங்கள் தொடர்பில் முதல்வர் மற்றும் கட்சித் தலைமையுடன் உரையாடி தீர்வு காணலாம் எனத் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் என்பது இந்தச் சபை கூடிய பின்னர் 3 ஆவது வரவு - செலவுத் திட்டம் என்பதனால. ஆட்சி விடயத்தில் முக்கிய மானது. இதன் காரணமாகவே அனைவரின் கரிசனையும் வரவு - செலவுத் திட்டத்தின்பால் திரும்புகின்றது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேநேரம் சபையின் தற்போதைய நிலைமை, வரவு - செலவுத் திட்டத் தயாரிப்பின் முன்னெடுப்பு போன்ற பல விடயங்கள் தொடர்பிலும்மாநகரசபையால்முன்னெடுக்க எண்ணும் திட்டங்களுக்கு நிதியைப் பெறுவதில் உள்ள இடையூறுகள் தொடர்பிலும் மாநகர முதல்வர் இ. ஆனல்ட் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டினார்.

## ஒத்திவைக்கப்படாது நாடாளுமன்ற அமர்வு

### செவ்வாய் கூடுகின்றது சபை

கொழும்பு, ஒக்.29

நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது என நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய அன்று காலை 10 மணி முதல் பிற் பகல் ஒரு மணி வரை நாடாளுமன்ற அமர்வு இடம் பெறவுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவது தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றக் குழுவின் விசேட கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர் தன மற்றும் கட்சி தலைவர்கள் இதில் பங்கேற்றனர். இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

## பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்கள் பழுது!

### சீரமைக்க சீன நிபுணரை அழைக்கிறது கோட்டா அரசு



கொழும்பு, ஒக்.29

நாட்டின் பெரும்பாலான பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் செயல்படவில்லை என்று இராணுவத் தளபதி, லெப்.ஜென ரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இன்று காலை தொலைக்காட்சி ஒன்றில் நடந்த செவ்வியில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இயந்திரங்களைச் சீர்செய்ய தொழில்நுட்பவியலாளர்கள் பெரும் முயற்சி செய்தார்கள், ஆனால் அது வெற்றிபெறவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

20 நாள்களுக்கு 24 மணி நேரமும் இந்த இயந்திரம் பயன்படுத்தப்படுவதால் அவை செயலற்றதாக இருந்திருக்கலாம் என்று இராணுவ தளபதி கூறினார்.

பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங் களைச் சீர் செய்ய சீனாவிலிருந்து தொழில்நுட்பவியலாளர் ஒருவரை அழைத்து வரவேண்டும். தற்போது இராஜதந்திர மட்டத்தில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அவர் நாளை இலங்கைக்கு வருகை தருவார்.

சீன தொழில்நுட்பவியலாளர் தனி மைப்படுத்தலின் கீழ் பி.சி.ஆர். இயந்திரங்களை சீரமைக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

## பலாலி வடக்கில் அந்தியேட்டி நிகழ்வில் கலந்துகொண்ட கொரோனா நோயாளி

### பலரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சி, பொலிகண்டியைச்சேர்ந்த நபர் ஒருவர் நேற்று கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அவர் கலந்து கொண்ட அந்தியேட்டி நிகழ்வில் பங்குகொண்டவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று திரும்பியவர்களில் மூவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அவர்களில் பொலிகண்டியைச்சேர்ந்த நபர், பலாலி வடக்கு, ஜே/254 அன்ரனிபுரத்தில் கடந்த மாதம் நடைபெற்றிருந்த சாவு வீடு ஒன்றில் கலந்து கொண்டிருந்தார் என்றும், அதன் பின்னர் மீண்டும் கடந்த 24ஆம் திகதி அங்கு நடைபெற்ற அந்தியேட்டி நிகழ்வில் பங்கேற்று விட்டு 26ஆம் திகதியே பொலி கண்டிக்குத் திரும்பினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவர் சென்று வந்த அந்தியேட்டி நிகழ்வில் பங்குகொண்ட நபர்கள் மற்றும் அவர் தங்கியிருந்த வீட்டாரை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல பொலிகண்டியிலும் அவருடைய வீட்டுச் சூழலில் உள்ள நான்கு வீடுகள் வரையில் தனிமைப்படுத் தப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

## மினுவாங்கொட, பேலியாகொடவில் இதுவரை 5,600 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஒக். 29

மினுவாங்கொட மற்றும் பேலியாகொட மீன் சந்தை கொத்தணிகளில் இதுவரை 5 ஆயிரத்து 600 பேருக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தொற்றுறுதியாகியுள்ளது.

அத்துடன் மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் கொரோனாக் கொத்தணி குறித்து விசாரணை நடத்துவதற்காக, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகபொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி காவல் துறைமாஅதிபர்அஜித்ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட பிரண்டிக்ஸ்கொத்தணியில்எவ்வாறு கொரோனா தொற்று பரவ ஆரம்பித்தது என்பது தொடர்பாக விசாரணை நடத்துமாறு, சட்டமா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தி இருந்தார். இதன் அடிப்படையில், கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் இந்த குழு நியமிக்கப் பட்டுள் ளது.

## வடமராட்சியைச் சேர்ந்த 3 கொரோனா நோயாளிகள் வீடுகளிலேயே தங்கவைப்பு

*யாழ்ப்பாணம், ஒக்.29*

*வடமராட்சியில் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட மூவரும் அவர்களின் வீடுகளிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.*

*அவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிச்செல்வது தொடர்பான தகவல்கள் எதுவும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.*

*மருதங்கேணி கொரோனா சிகிச்சை வைத்தியசாலை உட்பட்ட அனைத்து கொரோனா சிகிச்சை வைத்தியசாலைகளும் நோயாளர்களால் நிறைந்துள்ளன என்று தெரியவந்துள்ள நிலையில் நோயாளர்களை எங்கு பராமரிப்பது என்ற சிக்கல் காரணமாக அவர்களை வீடுகளிலிருந்து ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அறியமுடிந்தது.*

*வடமராட்சியில் பருத்தித்துறை சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த இருவரும், கர வெட்டி சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தமை தெரிந்ததே.*

*சில நாள்களுக்கு முன்னர் பருத்தித் துறை மற்றும் குருநகர் பகுதிகளில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## அத்தியாவசியத் சேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது

நாட்டின் தற்போதைய நிலையில் அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் உள்ளவர்களுக்காக இரண்டு வாரங்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை வழங்குவதற்கான விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வாரம் முழுவதிலும் முழுமையாக முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், மின்சாரம், நீர், எரிபொருள், எரிவாயு, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதற்கான திட்டமொன்றும் வகுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டை முடக்காமல் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள்

## அரச மருத்துவர் சங்கம் தெரிவுப்பு

நாட்டை முழுமையாக முடக்கும் அளவிற்கு கொரோனா தொற்றின் தாக்கம் நாட்டில் ஏற்படாத விதத்தில் சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அநுருத்த பாதெனிய இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

வயோதிபர்கள் மற்றும் தொற்றுநோய் ஆகியவற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கே தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எமது நாட்டில் கொரோனா தொற்றால் ஏற்படும் உயிரிழப்பு நூற்றுக்கு 0.2 வீதத்தில் காணப்படுகின்றது. ஆனால் உலகநாடுகளில் 2 அல்லது 3 என்றரீதியில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் நாட்டில் தொடர்ந்தும் கொரோனா தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக 9 வழிமுறைகளை அறிவித்துள்ளோம். இதிலே பிரதானமாக விநியோக நடவடிக்கைகள் ஊடாக தொற்று பரவுவதை தடுத்தல். மீன் விற்பனை மற்றும் ஆடை தொழிற்சாலை ஆகியவற்றில் ஏற்பட்ட தொற்றுபரவல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவது.

இதற்கு அந்தத் தொழிற்தளங்களில் முறையாக சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமையே காரணமாக அமைந்துள்ளது.

ஆகவே இதுபோன்ற விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது. இந்த நிலையில் 490 பொலிஸ் பிரிவுகளில் 200 இற்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு ஊரடங்கு அறிவிக்கப்பட்டால் நாட்டை முழுமையாக முடக்க வேண்டி ஏற்படும்.

ஆகவே அந்த நிலை ஏற்படாத விதத்தில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பி செல்லவே நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

## லிந்துலை நகரசபைத் தலைவர் பதவியில் இருந்து இடைநிறுத்தம்

லிந்துலை நகரசபை தலைவர் பதவியிலிருந்து அசோக சேபால இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர், சட்டத்தரணி லலித் யூ.கமகேவினால் இதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய உடன் அமுலாகும் வகையில் நகர சபையின் தலைவர் பதவியிலிருந்து அசோக சேபால இடைநிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன், தலைவர் பதவிக்கான அதிகாரங்களை செயற்படுத்துவதற்கான அனுமதி நகர சபையின் பிரதி தலைவர் லெட்சுமன் பாரதி தாசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## யாழில் மேலும் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி!

யாழ்ப்பாணத்தில் மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குமே இவ்வாறு கொரோனா தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேற்படி மூவரும் பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்து தனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விடத்தல்பளையில் தனிமைப்படுத்தலில் இருக்கின்ற தென்பகுதியைச் சேர்ந்த 37 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 243 பேருக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், ஏனையவர்களுக்கு தொற்று இல்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## மேல்மாகாண ஊரடங்கு உத்தரவு உயர்தர பரீட்சைக்கு தடையாகாது!

மேல் மாகாணத்தில் நேற்று நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்படவுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தால் கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எவ்வித நெருக்கடி நிலையும் ஏற்படாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக மேல் மாகாணம் முழுவதும் நேற்று நள்ளிரவு தொடக்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பொது போக்குவரத்து சேவைகள் பாதுகாப்பான முறையில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயர்தர பரீட்சை நிறைவு பெறும் வரையில் இந்தச் சேவையை தொடர்ந்து சிறப்பான முறையில் முன்னெடுக்குமாறு ரயில் திணைக்களம் மற்றும் அரச போக்குவரத்துச் சேவைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொதுப் போக்குவரத்துச் சேவையை வழமை போன்று முன்னெடுப்பதாக அரச பொதுபோக்குவரத்துத் துறையினர் உத்தரவாதம் வழங்கியுள்ளனர். எனவே, மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்படவுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தால் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித நெருக்கடி நிலையும் ஏற்படாது. – என்று தெரிவித்தார்.

# ஊரடங்கு காலத்தில் மேல்மாகாணத்துக்குள் உட்செல்லல், வெளிச் செல்லலுக்குத் தடை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியில் மேல் மாகாணத்திற்குள் பிரவேசிப்பது அல்லது அங்கிருந்து வெளியேறுவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்தி மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கவோ அல்லது வெளியேறவோ முடியாது.

நேற்று நள்ளிரவு 12 மணிக்கு மேல் மாகாணத்தில் 112 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதேபோன்று குளியாப்பிட்டி பிரதேசத்தில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. ஊரடங்கு சட்டம் திங்கட்கிழமை காலை 5 மணியுடன் நிறைவடைகின்றது.

ஏனைய 68 பொலிஸ் பிரிவுகளில் அதேபோன்று ஊரடங்கு சட்டம் இடம்பெறும். இந்த ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் எந்த வகையிலும் மேல் மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செல்வதற்கோ மேல் மாகாணத்துக்கு வருவதற்கோ யாருக்கும் வாய்ப்பில்லை.

மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்கும் அனைத்து நுழைவாயில் அமைந்துள்ள இடங்களில் பொலிஸ் வீதி தடைகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வீதி தடைகள் நாளை முதல் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படும் மேல் மாகாணத்தில் அதிவேக நெடுஞ்சாலையும் உள்ளடங்குகின்றது. இந்த வீதி ஊடாக மேல் மாகாணத்துக்கு வருவதற்கும் மேல் மாகாணத்தில் இருந்து வெளியே செல்வதற்கும் எந்த வாகனத்துக்கும் அனுமதியில்லை.

விபத்துக்கள் சம்பந்தப்பட்ட வாகனங்கள் மாத்திரம் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். விசேடமாக அத்தியாவசிய சேவையில் ஈடுப்பட்டுள்ளவர்களுக்குத் தமது கடமைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். இதைத் தவிர வேறு யாருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

முன்னர் திட்டமிடப்பட்டிருந்த திருமண வைபவங்கள் அல்லது வேறு எந்த வைபவங்களையும் ஊரடங்கு சட்ட காலப்பகுதியில் நடத்தப்படுவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதிக்குள் பல்வேறு வைபவங்கள் தொடர்பாக கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. பொதுமக்கள் ஒன்று கூடுதல், மண்டபங்களில் மக்கள் ஒன்று கூடுதல் இந்த காலப்பகுதியில் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வீடுகளில் சுயமாக தனிமைப்படுத்தப்பட்டவர்களில் சிலர் சுகாதார ஆலோசனைகளைக் கடைப்பிடிக்காமல் இருக்கின்றமை தொடர்பாகக் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்று மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதல் முறையாக நாட்டில் பரவ ஆரம்பித்தது. அப்போது பொதுமக்கள் மிகவும் அவதானத்துடனும், பொறுப்புடனும் அதனை தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். இதனை மீண்டும் நினைவில் கொண்டு பொதுமக்கள் செயற்படுவது அவசியம்.

வைரஸ் தொற்று தொடர்பில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவசர தேவைகளுக்காக தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் சிலர் இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் நடமாடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிகைகள் மேற்கொள்ளப்படும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டு மக்களுக்கு பீதியை ஏற்படுத்திய பொறுப்பை ஜனாதிபதி ஏற்கவேண்டும்!

## ஹர்ஷ டி சில்வா காட்டம்



கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு போலி பீதியை ஏற்படுத்தினோம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் ஆளும் தரப்பினர் போலி பீதியையே ஏற்படுத்தி வந்தனர் என்பதைத் தற்போது நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

தேர்தலை வெற்றிக் கொள்வதற்காக அரசியல் மேடைகளில் எம்.சி.சி. தொடர்பில் பலவாறு எச்சரித்தனர். ஆனால் அவை அனைத்துமே போலியானவை என்று தற்போது உறுதியாகியுள்ளன.

எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதால் நாட்டுக்குக் கிடைக்கும் நிதியை வேறு எந்த விடயங்களுக்கும் பயன்படுத்த முடியாது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களுக்கு மாத்திரமே அதனைப் பயன்படுத்த முடியும்.

எம்.சி.சி. ஒப்பந்தத்தை இலங்கைக்கு வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அவர் அது தொடர்பில் அமெரிக்காவுக்கு அனுப்பிய கடிதத்தைக் கூட நான் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தேன். பின்னர் எம்.சி.சி. தொடர்பில் சிக்கல் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? இவை தொடர்பாக உண்மை விரைவில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். – என்றார்.

# வடமராட்சியில் மீன் ஏற்றுமதி மையம் மூடல்

வடமராட்சியிலிருந்து பெருமளவு மீன் ஏற்றுமதியில் ஈடுபட்டு வருகின்ற MW மீன் ஏற்றுமதி நிறுவனத்தின் பருத்தித்துறை மையம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அதற்கு சீல் வைக்கப்பட்டு இராணுவப் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சியிலிருந்து பேலியகொடவுக்குப் பெருமளவான மீன் ஏற்றுமதி குறித்த நிறுவனத்தால் முன்னெடுக்கபட்டு வருவது வழமை.

நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அடையாளம் காணப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த மூவரும் குறித்த தொழிற்சாலையிலிருந்தே பேலியகொடவுக்குச் சென்று திரும்பியிருக்கின்றனர்.

இந்தநிலையில் MW என்ற குறித்த நிறுவனத்தின் ஐஸ் உற்பத்தி நிலையம் மற்றும் வாகனங்கள் உள்ளடங்கலாக அனைத்தும் பயன்படுத்த முடியாத நிலையில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதேவேளை, குறித்த நிறுவனத்தில் பணி செய்தவர்கள், தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பில் தகவல் திரட்டும் நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாநகர சபை அமர்வில் மணிவண்ணன் பங்கேற்றார்!

## அவரது கட்சியிலிருந்து ஆட்சேபம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.30

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவான உறுப்பினர் வி.மணிவண்ணன் சபை அமர்விற்கு நேற்று பிரசன்னம் தந்தமை தொடர்பில் அவரது அணியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரே கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரான வி.மணிவண்ணன் மீது மாநகர சபை எல்லைப் பரப்பரப்பிற்குள் வதியும் ஒரு வர் தொடர்ந்த வழக்கின் காரணமாக 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றம் சபை நடவடிக்கைகளில் அவர் பங்கு கொள்ள இடைக்காலத் தடை பிறப்பித்திருந்தது.

அந்த வழக்கை கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதி வழக்காளர் வாபஸ் வாங்கியதன் காரணமாக அத்தடை உத்தரவும் செயலிழக்க மணிவண்ணன் மீண்டும் சபை நடவடிக்கையில் பங்கு கொள்ளும் தகுதியைப் பெற்றிருந்தார்.

இதேநேரம் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு வாபஸ் பெறப்பட்டமை பற்றிய அறிவுறுத்தல் பிரதி தற்போதைய கொரோனா சூழலில் இன்னமும் யாழ். மாநகர சபைக்கு உத்தி யோகபூர்வமாக வந்து சேரவில்லை எனக் கூறப்படுகின்றது.

உத்தியோகபூர்வப்பதிவுப்பிரதியைப்பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டு, குறித்த வழக்கு கைவாங்கப்பட்டு விட்டது என சட்டத்தரணி உறுதிப்படுத்திய கடிதம் ஒன்றை முதல்வரிடம் சமர்ப்பித்து நேற்றைய சபை அமர்வில் மணிவண்ணன் பங்கு கொண்டார்.



மணிவண்ணனுக்கு எதிரான வழக்கு முடிவுறுத்தப்பட்ட அறிவித்தல் நீதிமன்றில் இருந்து சபைக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைத்ததா என்ற வினாவை அவரது கட்சியைச் சேர்ந்த வை.கிருபாகரன் ஆட்சேபமாக எழுப்பினார்.

அதற்கு, எந்த அறிவித்தலும் இன்னும் கிடைக்கவில்லை என மாநகர சபையின் செயலாளர் பதிலளித்த சமயம், சட்டத்தரணியால் வழங்கப்பட்ட விளக்கக் கடிதத்தை மாநகர முதல்வர் இ.ஆனல்ட் சபையில் வாசித்து அதை ஏற்பதாக அறிவித்தார்.

தொடர்ந்து சபை அமர்வு இடம்பெற்ற போது யாழ். பஸ்தரிப்பு நிலையக் கடைகளின் பிரச்சினைகள் தொடர்பான விடயத்தினை தனியாக ஆராய சகல கட்சிகள் சார்பிலும் ஒவ்வொரு பிரதிநிதிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அப்போது முன்னணி சார்பில் மணிவண்ணன் பெயரை பார்த்தீபன் பிரேரித்து அவர் பெயர் பதியப்பட்ட போது, முன்னணியின் மற்றுமோர் உறுப்பினரான ஜெயசீலனின் பெயரை கிருபாகரன் பிரேரித்தார்.

இதன்போது ஒரு கட்சியில் இருந்து எத்தனை பேரை நியமிப்பது என்று கேள்வி எழுப்பப்பட்டு, ஒருவருக்குத் தான் இடம் என்று குறிப்பிட்டு அந்த விடயமும் முடிவுறுத்தப்பட்டது.

# சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளோரை பொலிஸ், இராணுவம் கண்காணிக்கும்

கொழும்பு, ஒக் .30

கொவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயலணியால் புதிய சுயதனிமைப்படுத்தல் கண்காணிப்பு செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கொவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்ட நபரின் முதல் தொடர்பாளர்களை தங்கள் சொந்த வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் வைத்துக் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கொவிட் - 19 நோயாளியுடன் முதல் தொடர்பு வைத்திருக்கும் நபர் அடையாளம் காணப்பட்டால், அவர் வீட்டிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார். அவர்களின் தனிமைப்படுத்தல் உரியவாறு கண்காணிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களை அவர்களது வீடுகளுக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபடும் துறையினரின் நேர அட்டவணை வருமாறு:-

காலை 6 மணி முதல் முற்பகல் 11 மணி வரை - சம்பந்தப்பட்ட பகுதியின் பொது சுகாதாரப் பரிசோதகர் கண்காணிப்பில் ஈடுபடுவார்.

முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை - அந்தப் பகுதிக்குரிய பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

மாலை 4 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை - உறவினரின் இல்லத்தின் எல்லைக்குள் உள்ள முப்படையினரின் முகாமின் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

இந்த சுய தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையை யாரேனும் மீறினால், அப்பகுதியின் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் அவர்களைத் தனிமைப்படுத்தப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொவிட் - 19 பரவுவதைத் தடுப்பதற்கான தேசிய செயலணி குறிப்பிட்டுள்ளது.

# 20 ஆவது திருத்தச் சட்டம் நேற்று முதல் நடைமுறை

கொழும்பு, ஒக்.30

ஜனாதிபதிக்கு அதிகாரங்களை வழங்கும் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம் நேற்று தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயம் அறிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன நேற்றுக் கையொப்பமிட்ட நிலையில் இந்த அறிவிப்பு நாடாளுமன்ற ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தின்படி மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மீள வழங்கும் வகையில் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு கடந்த 22ஆம் திகதி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றால் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக். மூலம் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தலா?

## ஆப்கான் தூதுவரின் கருத்தை நிராகரித்தது பாகிஸ்தான்

தலிபான் தயாரிக்கும் போதைப்பொருள்கள் பாகிஸ்தான் வழியாக இலங்கைக்கு கொண்டு சேர்க்கப்படுகின்றன என உள்ளூர் ஊடகமொன்றுக்கு ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி கூறிய கருத்துக்களை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானி கராலயம் நிராகரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் இந்தக் கருத்தானது ஒரு நட்பு நாட்டின் (இலங்கையின்) குடிமக்களை தவறாக வழிநடத்தும் ஒரு முயற்சியாகக் காணப்படுவதாகவும் கொழும்பில் அமைந்துள்ள பாகிஸ்தான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

சந்தேகத்துக்கு இடமின்றி, பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் பாகிஸ்தான் ஒரு முன்னணி நாடாக இருந்து வருகிறது.

பயங்கரவாதததுக்கு எதிராக பாகிஸ்தானின் முக்கிய பங்கு உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. துரதிஷ்டவசமாக, ஆப்கானிஸ்தானின் அரசாங்கமற்ற இடங்களில் பாதுகாப்பான புகலிடங்களைக் கொண்ட பயங்கரவாதிகளின் கைகளில் பாகிஸ்தானே தொடர்ந்து பாதிக்கப்படுகிறது.

அந்த பயங்கரவாதிகளால் பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகள் தொடர்ந்தும் அழிவையே சந்தித்து வருகின்றன.

மேலும், நேட்டோ அறிக்கையின்படி ஆப்கானிஸ்தான் உலகின் மிகப்பெரிய நர்கோ (போதைப் பொருள்) உற்பத்தியாளர்.

அதன் போர்வீரர்களும் அதன் சமூகத்தின் போரிடும் பிரிவுகளும் போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தில் செழித்து வருகின்றன.

போதைப்பொருள் கடத்தல் ஒரு கடுமையான குற்றம் மற்றும் பாகிஸ்தான் நர்கோ வர்த்தகத்தை சரிபார்க்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது ஒரு சக்திவாய்ந்த போதைப்பொருள் தடுப்புப் படையைக் கொண்டுள்ளது மற்றும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை சரிபார்க்க மட்டுமல்லாமல், நர்கோ வர்த்தகர்கள் அதன் நுண்ணிய எல்லைகள் வழியாக நழுவுவதற்கான வாய்ப்பைக் முறியடிக்க பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லையின் கடுமையான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும் தனது அறிக்கையில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது.

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசை ஒன்றிணைந்து கோரவேண்டும்!

## முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விக்குழுச் செயலாளர் கருத்து



அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகளை நோக்குகையில், ஆட்சியாளர்கள் எமது பாதுகாப்பை உறுதிசெய்வார்கள் என்று நம்புவதில் பயனில்லை என்றே தோன்றுகிறது.

எனவே, மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிணைந்து அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விக்குழு செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

அந்தக் கட்சியால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோன வைரஸ் தொற்றுக்குள்ளான பலருக்கு நோய் அறிகுறிகள் தென்படாத நிலையில், ஒட்டுமொத்த சமுதாயமுமே இதனால் பாதிக்கப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது. இந்த வைரஸ் பரவலின் விளைவாக ஒரு சமூகம் என்ற வகையில் நாம் எத்தகைய நிலையிலிருக்கிறோம் என்பதை உணரமுடிந்தது. தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாகக்கூறி உண்பதற்கு அரிசி வாங்குவதற்குச் சென்றவர்களைக்கூட பொலிஸார் கைது செய்தனர். அதனை ஊடகங்களிலும் காண்பித்தார்கள்.

எனினும் அந்தச் சட்டத்தை வெகுவாக மீறிச்செயற்பட்ட பெருநிறுவனங்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தமது ஊழியர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டமைக்கான அறிகுறி தென்பட்ட போதிலும், சாதாரண மருந்துகளை வழங்கி அவர்களைத் தொடர்ந்தும் பணிபுரியுமாறு நிர்பந்தித்த மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை நிர்வாகிகள் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனினும் சாதாரண அப்பாவி பொதுமக்கள் மீது தனிமைப்படுத்தல் சட்டம் கடுமையாகப் பிரயோகிக்கப்படுகிறது. அவர்களது நிலை தொடர்பாக அரசாங்கத்திற்கு எவ்வித அக்கறையும் இல்லை.

தற்போதைய நிலைவரத்தின் விளைவாக தமது வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றாளர் கண்டறியப்பட்ட போதே நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அது பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம்.

பெருநிறுவனங்களில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட போது, நாட்டின் பொருளாதாரத்தை முடக்க இயலாது எனக்கூறி அரசாங்கம் ஏனைய பகுதிகளை அபாயத்தில் தள்ளியது. இவ்வாறான நெருக்கடிகளின் போது சாதாரண மக்களின் பக்கமிருந்து அரசாங்கம் சிந்திக்கவில்லை. அரசியல் அதிகாரத்தில் மாற்றம் ஏற்படாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இவ்வாறான நிலையில் இன்னமும் ஆட்சியாளர்கள் எமது பாதுகாப்பை உறுதிசெய்வார்கள் என்று நம்புவதில் பயனில்லை. எனவே அனைவரும் உயரிய மட்டத்தில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றும் அதேவேளை, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிணைந்து அரசாங்கத்தை வலியுறுத்துவோம். எனினும் நீண்டகால அடிப்படையிலான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தாமல் இதனை முழுவதுமாக மாற்றியமைக்க முடியாது. ஒன்று தொழிலாளர்கள் ஆட்சிய திகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் சட்டத்திற்கு இடமளித்து பேரழிவை எதிர்கொள்ள வேண்டும்.– என்றார்.

# நாடாளுமன்றச் செய்தியாளர்களை சுயதனிமைப்படுத்த வேண்டுகோள்

நாடாளுமன்றத்தில் கடந்த 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் இடம்பெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தின்போது ஊடகப் பணியில் ஈடுபட்டிருந்த 'சண்டே ரைம்ஸ்' ஊடகவியலாளர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அன்று நாடாளுமன்றத்துக்கு வந்த அனைத்து ஊடகவியலாளர்களையும் சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த வாரம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற நடவடிக்கைகளில் ஊடகங்களுக்கு அனுமதி இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 12 ஆம் பக்கத்தில்)

# மினுவாங்கொடை கொரோனா கொத்தணி தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைகிறது!

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் தற்போதைய எண்ணிக்கைக்கு அமைவாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை அளவில் மினுவாங்கொடை கொரோனா வைரஸ் கொத்தணி நோயாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்தை அடைந்திருப்பதாக பிரதி சுகாதர சேவைகள் பணிப்பாளர் நாயகம் (பொது மக்கள் சுகாதார சேவை) விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இந்த நிலை முழுமையாக சம நிலை அடைவதற்கு சில காலம் செல்லும். இருப்பினும் கம்பஹாவில் நோயாளர்கள் அடையாளம் காணும் எண்ணிக்கையைக் குறைந்த மட்டத்துக்கு இட்டுச் செல்லக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் ஆரம்பத்தில், சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பாலித கருணாபேம, கொரோனா தொடர்பாகப் புதிய தரவுகளைச் சமர்ப்பித்தார்.

கடந்த சிலதினங்களில் பெரும் எண்ணிக்கையிலான பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் தெரிவித்த அவர் 24 பி.சி.ஆர் பரிசோதனை மத்திய நிலையங்கள், 37 சிகிச்சை மத்திய நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டார்.

கொரோனா நோயாளர்களுக்காக 5 ஆயிரத்து 209 கட்டில்கள் இருக்கின்றன எனவும் 4 ஆயிரத்து 729 கொவிட் நோயாளர்கள் சிகிச்சை மத்திய நிலையங்களிலும் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுகின்றனர்.

மேலும் 369 கட்டில்கள் எஞ்சியிருக்கின்றன. பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதன் போது குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்தில் ஏதோ ஒரு வகையில் அனர்த்த வலயம் என்ற ரீதியில் அடையாளம் காணப்பட்ட சில பிரதேசங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பரிசோதனைகளின் எண்ணிக்கைக்கு அமைவாக நாட்டின் எந்த பகுதிகளில் நோயாளர்கள் அடையாளம்காணப்படுகிறார்கள் என்பதை முன்கூட்டியே கூற முடியாது என்றும் அவர் மேலும் தெரவித்தார்.

சுகாதார பிரிவினரால், இலக்கை நோக்கி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களில், நோயாளர்கள் அடையாளங் காண்பதை குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைப் பொது மக்களுக்கு தற்பொழுது தெளிவு படுத்தியிருக்கிறார் எனவும் இதற்கமைவாக செயற்படவேண்டிய முறை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானதாகும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவாமல் இதன் மூலம் கட்டுப்படுத்தக்கூடிதாக இருக்கும். கண்டறியப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையை பூச்சியத்திற்கு இட்டுச்செல்ல முடியாது. இதில் அதிகரிப்பு சில காலத்திற்கு இடம்பெறக்கூடும்.

இதற்குக் காரணம் நோயாளர்களைக் கண்டறிந்து சிகிச்சை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுத்தல் ஆகும். இவ்வாறான வைரஸ் கொத்தணி ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிருமி தொற்று நீக்கத்தை மேற்கொள்ளும் பணி நோயாளர்கள் அடையாளம் காணப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் மேற்கொள்ளப்படும்.

இதனால் இந்த நடவடிக்கையில் எதிர்நோக்கப்படும் நிலை மிகவும் பாரியதாக இருக்கும் என்று கூற முடியாது. இருப்பினும் நாம் முன்னெடுக்கும் நடவடிக்கையின் மூலமாக வெற்றி கிட்டும்.– என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் இதுவரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்தால் இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகள் தேவைப்படும். ஆனால் இங்கு நான்கு தொற்றாளர்கள் மாத்திரமே இனம்காணப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர்களையே எமது பிரதேசங்களில் தனிமைப்படுத்துகின்றனர். தனிமைப்படுத்தல் நிலையமாக இருந்த கோப்பாய் கல்வியற் கல்லூரியைத் தற்போது கொரோனா வைத்தியசாலையாக மாற்றவுள்ளனர். அதனைச் சூழவுள்ள மக்கள் இது தொடர்பில் அச்சத்தில் உள்ளனர். இவ்விடயத்தில் எமது மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் ஆகியோர் கண்டுகொள்ளாது உள்ளனர்.

கொரோனா பேரவலமானது ஏழத்தாழ ஒருவருடமாக உலகில் நீடிக்கிறது. இதனை ஒட்டுமொத்தமாக அழிப்பதில் உலக நாடுகள் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர். இந் நிலையில் தென்னிலங்கையில் இருந்து கொரோனா தொற்றாளர்களை இங்கு அழைத்து வந்து சிகிச்சை மேற்கொள்ளும் போது கொரோனா தொற்று இல்லாத எமது பிரதேசங்களிலும் கொரோனா பரவிவிடுமோ என்ற அச்சம் தோன்றுகின்றது.

யாழில் பலருக்கு கொரோனா தொற்று என அறிவிக்கின்றார்கள். ஆனால் உண்மையில் வெளிமாவட்டங்களில் இருந்து அழைத்துவரப்பட்டு யாழில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்களுக்கே கொரோனா தொற்று பாரிய அளவில் காணப்படுகின்றது. ஆனால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் மாத்திரமே தற்போது வரை கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

ஒரு மாவட்டத்தின் கொரோனா தொற்றாளர்களை இன்னோர் மாவட்டங்களுக்கு கொண்டுசென்று சிகிச்சையளிக்காது அந்தந்த மாவட்டங்களிலேயே சிகிச்சை நிலையங்களை அமைத்து சிகிச்சை அளிக்க வேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# விடுதலைப் புலிகளின் ஆயுதக் கிடங்கை தேடி பொலிஸார் வவுனியாவில் அகழ்வு!

## கிடைத்தது அலவாங்கும் பியர் ரின்களும் மட்டுமே

வவுனியாவில் நேற்று பெருமெடுப்பில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை தேடி நடத்தப்பட்ட அகழ்வில் அலவாங்கு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் வவுனியா விளக்குவைத்தகுளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப்பணி மேற்கொண்டிருந்தனர்.



இதன்போது வவுனியா நீதிபதி மற்றும் ஓமந்தை பொலிஸாரும் அந்தப் பகுதிக்கு பிரசன்னமாகியிருந்த நிலையில் தீயணைப்பு வாகனங்கள் தரித்து நிற்க கனரக வாகனங்களின் உதவியுடன் சுமார் 10 அடிக்கும் ஆழமாக நிலம் அகழ்வு செய்யப்பட்ட போது அலவாங்கு ஒன்றும் பியர் வெற்று ரின் என்பன அங்கு காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ‘சண்டே ரைம்ஸ்’ நாடாளுமன்ற செய்தியாளருக்கும் கொரோனா!

‘சண்டே ரைம்ஸ்’ பத்திரிகையின் நாடாளுமன்ற செய்தியாளர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பத்திரிகை அலுவலகம் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, சக ஊழியர்கள் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என சண்டே ரைம்ஸ் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபானம் அருந்திய இளைஞர் இரத்த வாந்தி எடுத்து சாவு!

மதுபானம் அருந்திய இளைஞர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி , பூநகரி 4 ஆம் கட்டையை சேர்ந்த ஜேசுராஜா திலகராஜா (வயது 30) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன் கடந்த் (செவ்வாய்க்கிழமை) மதுபானம் அருந்திய நிலையில் இரத்த வாந்தி எடுத்துள்ளார். அதனை அடுத்து சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) உயிரிழந்துள்ளார்.

# 4,142 பேர் மீண்டனர்!

கொழும்பு, ஒக்.30

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சைப்பெற்று வருபவர்களில் மேலும் 67 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 4,142 ஆக அதிகரித் துள்ளது.

அத்துடன் 5 ஆயிரத்து 44 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 19 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் இற்றைவரை கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 205 ஆக அதிகரித்துள்ளது.

# வீதியைக் கடக்க முயன்ற வயோதிபர் மோ.சைக்கிளுடன் மோதுண்டு சாவு

யாழ். சுன்னாகத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவர் இடைவழியில் நடு வீதியில் தரித்து நின்றமையால் வீதில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளை, திருக்கம்புலத்தை சேர்ந்த ஓய்வுபெற்ற கணக்காளரான வல்லிபுரம் ஆறுமுகசாமி (வயது 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த முதியவர், சுன்னாகம் பகுதியில் வீதியை கடக்க முற்பட்ட வேளை வாகனங்கள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருந்தமையால், நடு வீதியில் நின்றுள்ளார். அதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தி படுகாயமடைந்த முதியவரை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

# கொரோனாவில் மட்டக்களப்பில் மீன்பிடித் தொழில் பாதிப்பு!

கொழும்பு, ஒக்.30

கொழும்பு, பேலியாகொடை மீன்சந்தையில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையயடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல முடியாமல் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் சுமார் 25 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, பூநொச்சிமுனை, காத்தான்குடி நாவலடி உட்பட பல பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான மீனவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிடிக்கின்ற சொற்ப மீன்களையும் விற்பனை செய்ய முடியாமல் அவதியுறுவதாகவும் இதனால் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மேற்று பேலியகொட சென்று வந்த பொலிஸ் அதிகாரி திடீரெனச் சாவு

பியகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திடீரென உயிரிழந்துள்ளார்.

பேலியகொடவில் நேற்றுப் பகல் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மீண்டும் பொலிஸ் நிலையம் திரும்பியபோது அவர் திடீரென நோய்வாய்ப்பட்டுள்ளார்.

அதைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

பேலியகொட பிரதேசம் கொரோனா கொத்தணியாக மாறியுள்ளதால் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் மாதிரி பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.




# யாழ். பஸ் நிலைய வியாபாரிகள் மாநகர சபை முன் கவனவீர்ப்பு!



யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய அங்காடி வியாபாரிகள் மற்றும் மாநகர அப்பிள் வியாபாரிகள் நேற்று யாழ் மாநகர சபைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மாநகர முதல்வரின் தன்னிச்சையான முடிவால் தாமும் தமது குடும்பத்தவரும் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளனர் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு யாழ்.நீதிமன்றத்தின் கட்டளையின் பின் தமக்கு 2010 ஆம் ஆண்டு, யாழ் மாநகர சபையால் கடைகள் வழங்கப்பட்டது எனவும், தற்போது மாநகர முதல்வர் ஏதோ உள்நோக்கத்தோடு தமது கடைகளை அப்புறபடுத்த நினைக்கிறார் எனவும் வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ‘கௌரவ முதல்வரே!வாழ்வாதாரத்தை அழிக்க நினைக்கும் நீங்களா எமக்கு உரிமை பற்றி கதைப்பது?’, ‘கௌரவ மாநகர சபை



உறுப்பினர்களே! 45 உறுப் பினர்களும் எமக்காக சபையில் குரல் கொடுங்கள்’, ‘கௌரவ முதல்வரே! நம்பி வாக்கு போட்டோம்; நடுத் தெருவா நம் வாழ்வு?’, ‘அப்பிள் வியாபாரம் பஸ் நிலைய கடை தொகுதிகள் அமைந்த பகுதிகளில் தான் நடைபெறும்; பண்ணைப் பகுதிக்குச் சென்றால் எமது நிலை?’, ‘கௌரவ முதல்வரே! 134 குடும்பங்களை வீதிக்குக் கலைத்துத்தான் உங்களின் அதிகாரத்தை உலகிற்கு காட்டணுமா?’ - என்பன உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2020 இல் வெளியிடப்பெற்றது.